
# திராவிடத்தால் வாழ்கிறோம்

821

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

8

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# 'குறவஞ்சி' : ஒடுக்கப்பட்டவர்களின் குரல்!



படங்கள் உதவி : ஞானம்

***"அடிமைத்தனம் வீழ்க! அடக்குமுறை வீழ்க! படியுங்கள் படியுங்கள் நன்றாகப் படியுங்கள், உரக்கப் படியுங்கள். உணர்ச்சியோடு படியுங்கள், உன்மத்தர் ஆட்சியை உதியம் விளாறு போல் உடைத்தெரிய சத்தம் போட்டுப் படியுங்கள்! சர்வாதிகார ஆட்சியைச் சாய்ப்போம் சாய்ப்போம் என்று படியுங்கள். நமது அண்ணன், தம்பிகள் பாட்டன், பாட்டிகள் வேட்டையாடப் படுவதை நிறுத்த, நமது அக்காள் தங்கைகளின் வாழ்வு சூறையாடப்படுவதைத் தடுக்க, இன்பபுரிப் பேரரசின் பெருமைக்கு இழிவு வராமல் தடுக்க, பேரன்பு கொண்டோரே பிரியமுள்ள தோழர்களே படியுங்கள், இவைகளைப் படியுங்கள். நாசகாரர்களின் தர்பார் ஒழியட்டும்! நயவஞ்சகர்கள் வீழட்டும்! எரிமலை குமுறட்டும்! இல்லம்தோறும் நல்லவர் உள்ளம்தோறும் எழுச்சி பொங்கட்டும் வாரீர்! நாடு சுடுகாடாகாமல் தடுப்போம் வாரீர்!"***

'குறவஞ்சி' திரைப்படத்தில் மனநிலை பிறழ்ந்தவர் வேடத்தில் இருக்கும், கதாநாயகன் கதிரவன் (சிவாஜி) மக்கள் மத்தியில் கொடுமைக்கார ஆட்சி நடத்திவரும் மன்னன் இமயா, மந்திரி முகாரி ஆகியோருக்கு எதிராக சுவரெழுத்துப் பிரச்சாரம் செய்யும் காட்சியில் பேசும் வசனங்கள்தான் இவை.

கலைஞரின் இந்த உரையாடல், அடக்குமுறை ஆட்சியாளர்களுக்கு எதிராக எத்தனை ஆண்டுகள் ஆனாலும், மக்களைத் தட்டி எழுப்பும் உயிரோட்டமான முழக்கமாக இன்றும் இந்தியாவின் வடக்கு மாநிலங்களுக்கு அவசியமாக இருப்பதை அறியலாம்.

மக்கள் புரட்சியின் மூலம் கொடுமைக்கார ஆட்சி வீழ்த்தப்பட்டபின், ஆட்சியாளர்கள் கைது செய்யப்பட்டு, இன்பபுரிக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். அப்போது, மீனவ மக்கள் அவர்களைச் சூழ்ந்துகொண்டு கேலி செய்து பேசும் காட்சியில் கலைஞரின் வசனங்கள், ஆளும் பெரிய மனிதர்களின் மீதான உழைக்கும் விளிம்புநிலை மக்களின் கோபத்தை அவர்களது மொழியிலேயே நக்கலும் நையாண்டியுமாக மிகவும் யதார்த்தமாக வெளிப்படுத்தியிருக்கும்.

### உதயசூரியனுக்கு உத்தரவிடமுடியுமா?

திரைப்படத்தின் இறுதிக் காட்சியில் இன்பபுரி சக்கரவர்த்தியின் தர்பாரில் நால் வர்ண ஜாதிப் பாகுபாடு பற்றி கதிரவன் பேசும் காட்சியில், கலைஞரின் வசனங்கள் தெறிக்கும்...

**எல்லப்பன்: மன்னர் மன்னர் தென்பாண்டி கோபெருமானை மனம் போன போக்கில் இழித்துரைத்தாய்... அதுவொரு குற்றம், இந்தப் பெரும் நாட்டின் சட்டம் சாஸ்திரம், சம்பிரதாயம் அத்தனையையும் மீறி, ஜாதியிலே தாழ்ந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்யத் தீர்மானித்தாய் அது ஒரு குற்றம்.**


**கதிரவன் :** ம்... பிறகு

**இமயா: எங்கள் மரியாதைக்குரிய மன்னர் மேல் எதற்காக வசைமாரி பொழிந்தாய்?**

**கதிரவன் :** பிறகென்ன வாழ்த்துமாரியா பொழிவார்கள்? எம்மானே தென்மானே எல்லைப்புறத்து மக்கள் மீது இமயா எனும் எரிமலையைத் திறந்துவிட்ட கோமானே என்றெல்லாம், புகழ்பரணி பாட வேண்டுமோ? புவியாளத் தெரியாமல் புலி வாழும் காடுபோல நாட்டைச் சீர்குலைத்த தேவனே, தெய்வமே என்றெல்லாம் போற்றிப் புகழ்பாட வேண்டுமோ?

சந்தனக் கட்டை போல எலும்பைத் தேய்த்துக் கொடுக்கும் ஏழைக்கல்லவா தெரியும் வலி. அவன் இங்கு அரசரை வாழ்த்த, 'எடுடா தம்பி, எடுடா ஓலை' என்று





ஓடிவருவானோ? பெண்களைப் பறிகொடுத்த பெற்றோருக்கல்லவா தெரியும் வேதனை. அவர்கள் இந்த அரசை, 'நீடூழி வாழ்க' என்று முழக்குவார்களோ?

**மன்னன் : கதிரவா...**

**கதிரவன் :** உண்மையான வாழ்த்து உள்ளத்தின் அடித்தளத்தில் இருந்து எழும் வாழ்த்து உங்களுக்கு வேண்டுமா அரசே? எல்லைப்புறத்து மக்களை இமயாவின் கைகளில் இருந்து விடுதலை செய்கிறேன் என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள். என் உயிர் போவதாயிருந்தாலும் கவலையில்லை. ஆயிரம் முறை உங்களை வாழ்த்திவிட்டுச் சாகிறேன். இல்லை, இந்த வஞ்சகர்களின் நஞ்சு நிறைந்த நாக்கு வளைந்து நெளிந்து வாழ்த்தும் போலி வாழ்த்துதான் தேவையென்றால், போங்கள் எனக்கென்ன? மக்களின் பொல்லாத சாபத்திற்கு ஆளாகுங்கள், யாருக்குத்தான் என்ன?

**அமைச்சர்: கதிரவா நீ மீண்டும் மீண்டும் அரசரைக் கேலி செய்து பழித்துக்கூறும் அதே குற்றத்தைச் செய்து கொண்டிருக்கிறாய்.**

**கதிரவன்:** சுவையில்லாத கனி, சுருதியில்லாத இசை, சுந்தரமில்லாத பெண், சுதந்திரமில்லாத நாடு பழிக்கப்படுமே தவிர, பாராட்டப்பட மாட்டாது அமைச்சர் அவர்களே!

**மன்னன்: போதும் நிறுத்து, கீழ்க்குலத்துப் பொன்னிக்கும் மேற்குலமாம் உனக்கும் ஏற்பட்ட தொடர்பு, இந்த நாட்டுச் சட்டப்படி மாபெரும் குற்றம். உனக்கு மன்னிப்பே கிடையாது. அதற்கென்ன சொல்கிறாய்.**

**கதிரவன் :** சாதி இரண்டொழிய வேறில்லை என்று மூத்த தமிழச்சி மொழிந்தாளே அதைத்தான் சொல்கிறேன். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று பிற்போக்குச் சக்திகளின் மண்டையிலே ஒரு அடி கொடுத்த பெருமகனாம் வள்ளுவனின் தெள்ளுத் தமிழைச் சொல்லுகிறேன் வேறு என்ன நான் சொல்ல வேண்டும், வேந்தே! வேறு என்ன நான் சொல்ல வேண்டும்?

**மன்னன்: வேதம் வகுத்ததல்லவா ஜாதி?**

**கதிரவன் :** அந்த வேதத்தை வகுத்த வியாச முனிவரே மீனவப்பெண் பெற்றெடுத்த புத்திரர்தானே வேந்தே?

**மன்னன் : வியாக்கியானம் விளக்கங்கள் தேவையில்லை. நீ ஜாதியில் தாழ்ந்தவளைக் காதலித்து, சட்டத்தை மீறியிருக்கிறாய் அதற்கு உன் நேரடியான பதில் என்ன?**

**கதிரவன்:** ஹ......ஹ.... மேல்ஜாதி கீழ்ஜாதி, பார்த்தால் பாவம், தொட்டால் தீட்டு, இவைகளை சட்டத்தால் மாத்திரமல்ல பேச்சால், எழுத்தால், எண்ணத்தால், நற்செயலால் மாற்ற உழைக்கின்ற யாராயிருந்தாலும் அவர்களுக்கு நான் தலைவணங்குகிறேன். ஆனால், ஜாதி இருக்கத்தான் வேண்டும் என்று ஒரு சட்டம் இருக்குமானால், அந்தச் சட்டம் அரசாங்கத்தின் பெயரால் மட்டுமல்ல; ஆண்டவனின் பெயரால் இருந்தாலும் சரி, அந்தச் சட்டத்தை நான் ஒருவன் மட்டும் தனியாக அல்ல, இந்த நாட்டு மக்களே ஒன்று கூடித் தகர்த்தெரியவேண்டும் என்று பகிரங்கமாகச் சொல்லுவேன்.

**இமயா: ஆ ... இவன் மகாப் பயங்கரவாதி மன்னவா! மகா பயங்கரவாதி! இவனை உயிரோடு விடக்கூடாது.**

**கதிரவன் :** கொன்று புதைத்து விடுங்கள், ஆனால், நீங்கள் உயிர் கொடுத்துக் காப்பாற்றுகிறீர்களே ஜாதி, அந்த ஜாதி நீண்ட நாள் வாழ்ந்துவிடாது. இப்போதே ஊன் உருகி உள்ளுடல் கருகி, ஈரல் வற்றி, ஈழை கட்டி, இருமல் மிகுந்து மரணப் படுக்கையில் கிடக்கிறது உங்கள் ஜாதி. விரைவில் அழியப்போகிறது அந்த ஜாதி, அதை அழிக்கப்போகிறது அறிவின் ஜோதி.

**மன்னன்: கதிரவா! உன்மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்களுக்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு பொன்னியையும் மறந்து விடுவதாக வாக்களித்தால், உன்னை விடுதலை செய்கிறேன்**

**கதிரவன்:** விடுதலை! மனம் நிறைந்தவளை மறக்க வேண்டும்; மானம் தலைகுனிய மன்னிப்புக் கேட்க வேண்டும் ம்...ஹ.... அப்படி அடிமைத்தனமாக உயிர்வாழ, இந்தத் தமிழ்நாட்டில் இருக்கிற காக்கை, குருவி, புழு பூச்சி கூட இனிமேல் சம்மதிக்காது மன்னவா சம்மதிக்காது.

**மன்னன் : கடைசியாகக் கேட்கிறேன், உன் பிடிவாதத்தைக் குறைத்துக் கொள்ள முடியுமா முடியாதா?**

**கதிரவன்:** ஹ...ஹ.... குளிர் வழங்கும் பெரு நிலவே! நீ கொள்ளிக் கட்டையாகிவிடு! உலகை வாழ்விக்கும் உதயசூரியனே! நீ ஒளியிழந்து ஓடிவிடு என்று உத்தரவிடலாமா அரசே! அந்த உத்தரவுதான் அமுலாகுமா அரசே?

1960-இல் இத்திரைப்படம் திரைக்கு வந்து பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. ஜாதியையும் அதனைப் படைத்த வேதத்தையும் எதிர்த்து எள்ளிநகையாடும் துணிச்சலான வசனங்களை, இத்தனை சிறப்பான மொழிநயத்தோடு எழுதியவர் தலைவர் கலைஞரைத் தவிர வேறு எவர் இருக்கிறார்கள்?.

**...காட்சி விரியும்**

## `சஜத் உகுத்த கண்ணீரின் மானுடம்'!

காஷ்மீர் சுற்றுலா பயணிகள் மீது நிகழ்த்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டின்போது, ஒரு சிறுவனைத் தோளில் தூக்கிக் கொண்டு ஓடிச் சென்று காப்பாற்றியவர் சஜத் அகமது பட். அங்கு குதிரையோட்டிக் கொண்டிருப்பவர். அவரைத் தேடிக் கண்டுபிடித்து, பேட்டி எடுத்து வெளியிட்டிருந்தார்கள். அதுகுறித்து எழுத்தாளர் ராஜசங்கீதன் தனது முகநூலில் பதிவிட்டுள்ள குறிப்பிலிருந்து...

"சுற்றுலா பயணிகளால்தான் எங்களுக்கு வருமானம். அவர்களுக்கு ஒன்று என்றால், எதற்கும் யோசிக்கமாட்டோம். மனிதநேயத்துக்கு முன் மதமெல்லாம் ஒன்றும் இல்லை. சம்பவ இடத்துக்குச் சென்று பார்த்ததும் எனக்கு கண்ணீர் வந்தது. அங்கிருப்பவர்கள் அழுததும், எனக்கும் அழுகை வந்தது. தீவிரவாதிகள் அவர்களைக் கொன்றதற்குப் பதிலாக எங்களைக் கொன்றிருக்கலாம் என்று, பேட்டியில் கூறியுள்ளார்.

சங்கிகள் தம் மக்களுக்கு எதிராக, வஞ்சத்தைக் கட்டவிழ்ப்பார்கள் என்பது சஜத்துக்குத் தெரிந்திருக்கலாம். பா.ஜ.க. கூட்டம் காஷ்மீரிகளுக்கும் இஸ்லாமியருக்கும் எதிராக இச்சம்பவத்தைப் பயன்படுத்தும் என்பதும் அவருக்குத் தெரிந்திருக்கலாம். இந்திய அரசு, இச்சம்பவத்துக்குப் பிறகு இன்னும் அடக்குமுறையை காஷ்மீர் மீது கட்டவிழ்க்கும் என்றும்கூட, அவருக்குத் தெரிந்திருக்கலாம். இதில் எதுவும் அவரது மனிதநேயத்தைக் குலைக்கவில்லை. அன்பை இற்றுப்போக விட்டுவிடவில்லை. பரிவைச் சுமையாகப் பார்க்க வைக்கவில்லை.

மறுபக்கத்தில் தந்தை ராமச்சந்திரனைத் தாக்குதலில் பறிகொடுத்த மகள் ஆரதி பேசுகிறார். "என் தந்தை கொல்லப்பட்டதும் பரிதவித்து நின்ற எனக்கு, ஷபீர் மற்றும் முசாபிர் என இரு காஷ்மீரி டிரைவர்கள் உதவினார்கள். ஊர், இடம் தெரியாத எனக்கு பிணவறை தொடங்கி, வசிப்பிடம் வரை உடன் இருந்து உதவினார்கள். அந்நியர்களாக எங்களை அவர்கள் பார்க்கவே இல்லை. சகோதரர்களைப் போல் பார்த்துக் கொண்டார்கள். காஷ்மீருக்குப் போனதில் எனக்கு இரு சகோதரர்கள் கிடைத்திருப்பதாகச் சொல்லித்தான் அவர்களிடமிருந்து விடைபெற்றேன். அவர்களை அல்லா நன்றாக பார்த்துக் கொள்ள வேண்டும்" என்றும் கூறியிருக்கிறார்.

சஜத் உகுத்த கண்ணீரின் மானுடம், ஷபீர் மற்றும் முசாபிரின் பரிவு, ஆரதி கொண்டிருக்கும் மதச்சார்பின்மை ஆகியவைதான் இந்தத் தாக்குதலில் நாம் எடுத்து வரித்துக்கொள்ள வேண்டியவை. சங்கப் பரிவாரத்தின் வெறுப்புக் கூச்சலையோ பா.ஜ.க. அரசின் தேசியவாத சிலுப்பலையோ, ஊடகங்களின் போர் பரணியையோ அல்ல" எனப் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### வீட்டுக்கு வந்த எங்கள் தலைவர்!



ஏ.வீ.இராமநாதன்

1989-ஆம் ஆண்டு, ஆயிரம்விளக்குத் தொகுதியில் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருகை தந்திருந்தார். அப்போது கூட்டத்தை முடித்துக் கொண்டு, எங்கள் இல்லத்திற்கு வருகை தந்தபோது, அவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. தலைவர் மீது அதீதப் பற்று கொண்ட, என் தந்தை ஏ.வரதப்பன், என் தம்பி வி.முனியப்பன் ஆகியோர் உடன் இருக்கிறார்கள். மிகுந்த மகிழ்ச்சி அடைந்த உன்னதத் தருணம். .

**– ஏ.வீ.இராமநாதன்,**
**மாவட்டப் பிரதிநிதி,**
**சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### திராவிட மாணவர் இயக்கம்!

திராவிடர் கழகம் தோன்றுவதற்கு, பெயர் மாற்றம் பெறுவதற்கு சில மாதங்களுக்கு முன்பு கும்பகோணத்தில், 1944-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 மற்றும் 20 தேதிகளில், திராவிட இயக்க மாணவர்கள் முதன்முதலாகக் கூடினர். அப்போது முதல், திராவிட மாணவர் இயக்கம் ஓர் அமைப்பாகச் செயல்படத் தொடங்கியது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131